2021 ஆகஸ்ட் 23]

3. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2021-2022, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause (*3*) of Article *203* of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year *2021–2022*."

4. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்

கோரிக்கை எண் 40-நீர்வளத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 40–நீர்வளத் துறை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நீர்வளத் துறை பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,766,45,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,845,86,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிகிற மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கின்ற காரணத்தினால் நேரத்தின் அருமை கருதி, பெயரைக் குறிப்பிட்டதும் மாண்புமிகு*